

விருதுநகர் தெற்கு மாவட்டம் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் செட்டிபட்டி ஊராட்சியில் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மைய கட்டிடம் திறப்பு விழாவை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் முன்னாள் சேர்மன்கள் சுப்பராஜ், சிவப்பிரகாசம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, நகர செயலாளர் ஏ.கே.மணி, மாவட்ட பொருளாளர் கே.வி.கே.பிரபாகரன் ஆகியோர் உடன் இருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 3. 26 கோடியில் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையத்தை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, நகரமன்ற துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, ஆணையாளர் ஸ்வேதா, பொறியாளர் சுப்ரமணியபிரபு, பொதுப்பணி மேற்பார்வையாளர் ராம்ஜி,சுகாதார ஆய்வாளர் கார்த்திகேயன், மாவட்ட அவைத் தலைவர் மோகன், நகர்மன்ற உறுப்பினர் கண்ணன், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் பாண்டியராஜன், அரசுஒப்பந்ததாரர் வேலுச்சாமி, உள்ளிட்டநகராட்சி பணியாளர்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி ஒன்றியம் குதக்கோட்டை ஊராட்சி வள்ளிமாடன் வலசை கிராமத்தில் ரூ.6.25 கோடி மதிப்பிட்டில் பெரியார் சமத்துவபுரம் கட்டி முடிக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நடைபெற்ற நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இதனைதொடர்ந்து,பெரியார் சமத்துவ புரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,மாவட்ட வருவாய் அலுவலர் சங்கர நாராயணன், மாவட்டக் கழகச் செயலாளர் சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் கூடுதல் ஆட்சியர் ஆகியோர் ரிப்பன் வெட்டி கல்வெட்டுவை திறந்து வைத்து பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதனை தொடர்ந்து. பெரியார் சமத்துவ புரத்தை பார்வையிட்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிராம்பெல் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு மாவட்டம் இராமநாதபுரம் மேற்கு ஒன்றியம் கோட்டைக் கருங்குளம் ஊராட்சி வடிவமன்பட்டியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் 10 பேர் அக்கட்சியிலிருந்து விலகி இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் மி.ஜோசப்பெல்சி முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.நிகழ்வில் கோட்டைக்கருங்குளம் ஒன்றிய குழு உறுப்பினர் எஸ்தாக் கெனிஸ்டன், கோட்டை கருங்குளம் கிளை செயலாளர் சி.சொக்கலிங்கம், வடிவம்மன்பட்டி கிளை செயலாளர் மிலிட்டரி முத்து,கோட்டை கருங்குளம் BLA2 அண்ணாதுரை,காந்தி நகர் சாமி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.





கடலூர் மேற்கு மாவட்டம் நல்லூர் வடக்கு ஒன்றியம் பூலாம்பாடியில் ஒன்றிய துணை செயலாளர் டி. அண்ணாதுரை நிகழ்ச்சி ஏற்பாட்டில் கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு மற்றும் புடவை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க. வெங்கடேசன் வழங்கினார். உடன் எஸ். இராமு, குரு சரஸ்வதி. அன்புகுமரன், குணா, தனசேகரன், ரகு, எம்.காமராஜ், முத்துக்கருப்பன், ஜெ.ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



சிவகங்கைமாவட்டம்,சிவகங்கைவடக்குஒன்றியச்செயலாளர் (ஓ.பி.எஸ்.அணி) முருகேசன்தலைமையில்நிர்வாகிகள்செந்தாமரைசெல்வி,ரமேஷ் உட்பட 50க்கும் மேற்பட்ட வர்கள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார்கள். உடன் சிவகங்கை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் திருமலை முத்துராமலிங்கம், வர்த்தக அணி அனிபா உட்பட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் தேனி தனியார் மண்டபத்தில் தி.மு.க. பொறியாளர் அணியின் மதுரை, நெல்லை, தூத்துக்குடி மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தேனி தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளர் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இந்த ஆலோசனை கூட்டத்தில் பொறியாளர் அணி மாநில செயலாளர் எஸ் கே பி கருணா, மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார் மற்றும் மாநில துணைச் செயலாளர்கள் முன்னாள் எம்பி சண்முக சுந்தரம். கலை கார்த்திகேயன்,ராஜா வர்மன், அன்பழகன் ஆகியோர் கலந்து கொண்டனர் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேனி தி.மு.க. வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் முத்துக்குமார் சிறப்பாக ஏற்பாடு செய்து நன்றியுரை ஆற்றினார்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி பேரூராட்சி அலுவலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. பேரூராட்சி மன்ற தலைவர் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கவுன்சிலர் சரவணன். கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கையில் புதிதாக ரூபாய் 5கோடியே 55லட்சத்து 5ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத் திறப்பு விழாவில் மாவட்ட திட்ட இயக்குநர் மரு.அரவிந்த் ஆணையாளர் செழியன், ஒன்றிய கழக செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், பெ.மந்தக்காளை, சிவகங்கை நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கங்கை கொண்டான் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி மதுமிதா கருப்பசாமி அகில உலக அளவில் மலேசியாவில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் பங்கேற்று வெற்றி வாகை சூடிய அவருக்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின்படி நெல்லை மேற்கு மாநகர தி.மு.க. சார்பில் நெல்லை மேற்கு மாநகரப் பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் கேடயம் பரிசாக வழங்கி பாராட்டி ஊக்கத்தொகை வழங்கினார்.நிகழ்வில் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி,கங்கைகொண்டான் கிளைச் செயலாளர் செல்வி ராமசாமி, பள்ளி தலைமை ஆசிரியர் வளர்மதி, ஒன்றிய குழு உறுப்பினர் மாலதி செல்லதுரை,மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணி ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், தத்தனேரி கிராமத்தில் ரூ.9.80லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொதுவிநியோக கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரஞ்சித்,தங்கவேல், விளாத்தி குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், விளாத்திகுளம் மத்திய ஒன்றிய செயலாளர் ராமசுப்பு, ஆகியோர் கலந்து கொண்டனர்.